**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2015–16 ஆம் நிதியாண்டு – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – புதுக்கோட்டை, காதுகேளாதோருக்கான அரசு நடுநிலைப் பள்ளிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது – ரூ.1.16 கோடி நிதி ஒப்பளிப்பு செய்வது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை ( நிலை) எண் 02** | **நாள் 25.01.2016**

**மன்மத–தை 11,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கவும்:**

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை, நாள் 14.09.2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் ந.க.எண்.5474/சிப.1/2015, நாள் 29.09.2015.

-------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அறிக்கையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி 110–ன் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.09.2015 அன்று ஏனையவற்றுடன், இத்துறைச் சார்ந்த அறிவிப்புடன், பின்வரும் அறிவிப்பு ஒன்றினை அறிவித்துள்ளார்கள்:–

> **“மாநிலத்திலுள்ள அரசு சிறப்பு பள்ளிகளில் படிக்கும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு சிறப்பு கல்வி அளிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் மொத்தம் 23 அரசு சிறப்பு பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டையிலுள்ள காது கேளாதோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி 22 ஆண்டுகளாக வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இப்பள்ளியில் ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளில் 50 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்தப் பள்ளிக்கு விடுதி மற்றும் வகுப்பறைகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் 5,414 சதுர அடி பரப்பளவில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்’’.**

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வண்ணம் செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், புதுக்கோட்டை அவர்களிடமிருந்து பெறப்பட்ட திட்ட மதிப்பீட்டின்படி, புதுக்கோட்டை காதுகேளாதோருக்கான அரசு நடுநிலைப் பள்ளிக்கு 5414 சதுர அடி பரப்பளவில் விடுதி மற்றும் வகுப்பறைகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக, ரூ.1.16 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்து அதனை ஏற்று, புதுக்கோட்டை காதுகேளாதோருக்கான அரசு நடுநிலைப் பள்ளிக்கு 5414 சதுர அடி பரப்பளவில் விடுதி மற்றும் வகுப்பறைகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.1.16 கோடி (ரூபாய் ஒரு கோடியே பதினாறு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேற்படி செலவினத்தினை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் மற்றும் பணிகள் முடிவடைந்த பின்னர், அதற்கான பணி முடிப்பு சான்றிதழினை (Work Completition Certificate) அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**[த.பி.பா]**

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"4235– சமூகப் பாதுகாப்பும் நலன் குறித்த மூலதனச் செலவு–02 சமூக நலன்–101 – ஊனமுற்றோர் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II – மாநில திட்டம்–JU – கட்டடங்கள்–16 – பெரும்பணிகள்."

(த.தொ.கு 4235–02–101–JU–1601)

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப் பணித் திட்டம்" குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் போவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்(வரவு–செலவு–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற போவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வரவு–செலவு–I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2015–16 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித்(சந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண் 3336/நிதி(சந)/2016, நாள் 20.01.2016ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 2013. (இரண்டாயிரத்து பதிமூன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர்(சந(ம)சதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை–9.
நிதித்(சந) (வ.செ.பொ.1/11) துறை, சென்னை–9.
நிதி (பொதுப்பணி) த்துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், மாற்றுத் திறனாளிகள்நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்